சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 21/2016

**PW 1 பொன்மணி தங்கம்** 10.10.2025

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்தின் போது நான், எனது குழந்தை இருவரும் எனது கணவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தில் தான் வந்தோம் என்று சொன்னால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மீது பரிகாரம் கோரியுள்ளோம். இந்த வழக்கில் கண்ட 1ம் எதிர்மனுதாரர் எனது கணவர் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையானது எனது கணவர் மீது தாக்கல் செய்யப்பட்டு குற்ற வழக்கு குற்றவியல் நீதிமன்றததில் நடந்தது என்றால் சரிதான். எனது கணவர் விடுதலை ஆனதற்கு காரணம் எதிர்திசையில் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த அருண்பிரசாத் என்பவர் இறந்த காரணத்தினால் எனது கணவர் விடுதலை செய்யப்பட்டார் என்றால் சரிதான். எனது கணவர் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்திய நிலையில் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மருத்துவபில்கள், மருத்துவ ஆவணங்கள் தயாரிக்கப்பட்டவை என்றால் சரியல்ல. எனது மகளுக்கு விபத்தினால் கொடுங்காயம் ஏற்படவில்லை என்றும் சாதாரண காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனது கணவர் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் வழக்கறிஞர் வைத்து வழக்கை நடத்தவில்லை என்று சொன்னால்

அது சரிதான். நீதிமன்றத்தை திசை திருப்புவதற்காகத் தான் எனது கணவர் இந்த வழக்கில் ஆஜராகவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. எனது கணவர் இந்த வழக்கில் ஆஜராகததற்கு காரணம் அவர் தான் வாகனத்தை கவனக்குறைவாக இயக்கி விட்டார் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1ம் எதிர்மனுதாரர் எனது கணவர் என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் நானும் எனது குழந்தை பின்னால் உட்கார்ந்தும் எனது கணவர் வாகனத்தை ஓட்டி சென்றார் என்றும், அந்த வாகனத்தின் பதிவெண் TN 41 AF 3731 என்று சொன்னால் சரிதான். எனது கணவர் விபத்தின் போது இருசக்கர வாகனத்தை எங்களது ஊருக்கு மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஓட்டி சென்றார் என்றால் சரிதான். எனது கணவர் எங்களுடன் பேசிக் கொண்டு கவனக்குறைவால் எதிர்திசையில் இருசக்கர வாகனத்தில் வந்த நபர் மீது மோதிவிட்டார் என்றால் சரியல்ல. அந்த விபத்தின் காரணமாக கல்லூரி மாணவர் அருண்பிரசாத் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது கணவர் தான் காரணம் என்று போலிசார் விசாரணையில் தெரிய வந்த காரணத்தினால் முதல் தகவல் அறிக்கையும் இறுதி அறிக்கையும் எனது கணவர் மீது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரர் எனது கணவர் தான் என்றும், அதனால் இழப்பீடு வழங்கனில் 2ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. அதனால் இந்த

வழக்கானது 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்ட வேண்டும் என்றால் சரியல்ல.

**4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

குற்ற வழக்கில் எனது கணவர் விடுதலை செய்யப்பட்டார் என்ற நிலையில் அந்த குற்றவியல் நீதிமன்ற தீர்ப்பு இந்த தீர்ப்பாயத்தை கட்டுப்படுத்தாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது இந்த வழக்கானது எனது கணவரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்ற நிலையில் 2ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அதனால் 4ம் எதிர்மனுதாரர் எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அருண் பிரசாத் இறந்ததை பொருத்து தாக்கல் செய்யப்பட்ட MCOP 99/2015 என்ற வழக்கில் 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக தான் தீர்ப்பாகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதனால் 4ம் எதிர்மனுதாரருக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி